Elementary School Teachers

*52. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the District Educational Officer, Mayuram cancelled any of his orders upgrading elementary school teachers of secondary grade working in higher grade posts during the academic year 1968-69 and 1969-70 ; and

(*b*) if so, the reasons for such cancellations ?

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1968-69, 1969-70-ஆம் கல்வி ஆண்டுகளில் துவக்கத் தரப் பதவிகளில் பணிபுரியும் இடைநிலைத் தரத்தைச் சேர்ந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர் பதவிகளைத் தரம் உயர்த்துவதற்கான தனது ஆணைகளை மாயூரம், மாவட்ட கல்வி அதிகாரி ரத்து செய்தாரா ?

(இ) ஆமெனில், அவ்வாறு ரத்து செய்ததற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம். பதினெரு ஆசிரியர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் 1968-இல் ரத்து செய்யப்பட்டன. ஆனல், 1969-70-இல் அத்தகைய நேர்வுகள் எவையும் இல்லை.

(இ) மாவட்ட வாரி பணி மூப்பு நிலையைக் கருதிப் பார்க்கையில், அந்தப் பதினெரு ஆசிரியர்களும் மொத்தப் பணியில் மற்றவர்களுக்கு இளநிலையாளர்களாய் இருப்பதாகத் தெரியவந்தது.

Statue of Raja Raja Chola

*53. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the Government of India have given permission to install the statue of Raja Raja Chola in the Brahadeeswara Temple, Thanjavur ; and

(*b*) if so, when it is proposed to be installed ?

இராச இராச சோழனின் சிலை

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர், பிரகதீஸ்வரர் கோயிலில் இராச இராச சோழனின் சிலையை நிறுவுவதற்கு இந்திய அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நிறுவ உத்தேசித்துள்ளது ?

[31st August 1970

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இராஜ இராஜ சோழனின் சிலை நிறுவப்பட்டு வருகிறது. அச்சிலையைத் திறப்பதற்கு சிறப்பு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். எத்திராஜுலு : அந்தச் சிலையை வைக்க எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது ? கோயிலுக்குள்ளேயே வைப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறதா அல்லது வெளியே வைப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சிலை அமைப்புக் குழுவினர், கோயிலினுடைய பிரகாரமாகிய பரந்த வெளியின் உட்புறத்தில் வைக்க வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் அந்தக் கோயில் பராமரிப்பு முழுவதும் இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ் இருக்கின்ற காரணத்தால், அந்த இடத்தில் வைக்கக் கூடாதென்று அவர்கள் மறுப்புத் தெரிவித்தார்கள். பிறகு வேறு ஒரு இடத்தில் அந்த சிலையை வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கும் இலாகாவினர் மறுப்புத் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு தான் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியதன்பேரில், அந்த இடத்தில் வைத்துக் கொள்ளலாமென்று அவர்கள் அனுமதி அளித்தார்கள். இப்போது உள்ளே முதல் கோபுரத்திற்கும் இரண்டாவது கோபுரத்திற்குமிடையே அந்தச் சிலை வைக்கப்பட இருக்கிறது. ஆனால் அந்த இடத்தைப் பார்க்கிறவர்கள் அந்த இடத்தில் வைப்பதைவிட வேறு ஒரு இடத்தில் வைத்தால், மற்றவர்கள் அந்தச் சிலையைப் பார்க்க வசதியாக இருக்கும் என்கிறார்கள். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சிலையை யாரும் நன்றாகக் கவனித்துக் காண முடியாத அளவுக்கு இருக்கிறது. தற்போது சிலை அங்கே வைக்கப்பட்டு திறப்பு விழாவுக்காக அது காத்துக் கொண்டிருக்கிறது. பலரும் சிலையைக் கோயிலுக்கு வெளியே கொண்டுவந்து நகரத்தில் மக்கள் நன்றாகப் பார்க்கக்கூடிய ஒரு நடு இடத்தில் வைக்கலாம் என்று கருத்துச் சொல்லி வருகிறார்கள். இப்போது அனுமதிக்கப்பட்ட இடம் பார்வைக்கு ஏற்றதாக, கவர்ச்சிக்குரியதாக இல்லை. மேலவை உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களே கூட இதைப் பற்றிப் பத்திரிகையில் தம் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி எல்லோரையும் கலந்தாலோசித்து, தகுந்த இடத்தைப் பார்த்து முடிவு செய்யலாம் என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. திறப்பு விழா இன்னமும் நடைபெறவில்லை.

Drought relief funds

*54. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether it is a fact that the Tamil Nadu Government have demanded from Government of India a share from the drought relief and special assistance funds proposed in the Central Budget :

(*b*) if so, whether any reply has been received from them ; and

(*c*) the details thereof ?